காக்கூர்

முகம்மது ஈசுப்பு தாசர்

சிவமயம்.

சிந்திக்கவரும் ஜெயம்

இஃது

திருவருட்பிரகாச வள்ளலாகிய
சிவசுப்பிரமண்யக்கடவுள் மீது.

இராமநாதபுரம் ஜில்லா முதுகுளத்தூர் போஸ்ட் காக்கூர்
மாநகரம்.

ப. மு. முகம்மது ஈசுப்புதாசர் அவர்களாற்

கனவிற்பாடிய கந்தன்றுதி.

இஃது

சகலகனதனவான்கள் விருப்பத்தின்படி

இரங்கோன் நெ 24-B, சீக்கே மவுந்தாலே வீதி,
எல். பி. பி. எலெக்ட்ரிக் அச்சேந்திர சாலையில்
பதிபிக்க பெற்றது.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது
காப்பிரைட்

1925

இதன்விலை அணா 0-8-0

கடவுள் துணை.

நெடுமொழி சாற்றுக்கவிகள்.

——(❀)——

விருத்தம்.

பவச்சங்கமாயினும் பஞ்சாய்பறக்கும் பார்விளங்கும்
தவச்சிங்கமாயுறும் தனியோன் அருள்நின்றுதான் துலங்கும்
கெவிச்சிங்கமாயினும் கெற்பம்கலங்கும் கெடிமூழங்கும்
கவிச்சிங்கமாய்வரும் காக்கூரு ஈசுப்புகவியதற்கே

இதுவுமது

காக்கூர் நகர்வாழ்ந்திலகும் கவிதாசன் ஈசுப்பு
பாக்களுக்கும் கவிகளுக்கும் பரனருள்செய் அசரீரீ
வாக்கதற்கும் தடுத் தாரும்மறுமொழி புரைத்தால்
நாக்கழுகி குளுகுளுத்து நாசம்மடைவாரே

இஃது

பொதுநலத்தார் புகழ்ந்த கவிகள்.

விருத்தம்

கச்சிதமான கருணாவு தான்கருணை பெற்றோன்
உச்சிதமான வரும்யோக சாலிஉயர் மேன்மைதரும்
வச்சிரதேகன் முஹம்மது ஈசுப்பு வாக்குதனிற்
லெக்ஷிமி நின்றுவிளையாடு வாளெந்த வேளையுமே

இஃது

இராமநாதபுரம்ஜில்லா முதுகுளத்தூர் சரவணக்கவிராயர்

அவர்கள் பேரராகிய

சாமிநாதபிள்ளை அவர்களாலியற்றிய

வெண்பா

மாசிலாமுத்து மணியே மணிவிளக்கே
தேசுயரும் மாவித்வ சிங்கமே ஈசுப்பு
வேந்தே எனைக்கவிதை விள்ளஉரை செய்யபனம்
தேர்ந்தே னிப்பாவை யுரைத் தேன்

இஃது

இராமநாதபுரம் ஜில்லா சேகரம் பாகைமாநகர்

அருட்கவி பாவலர்

கருப்பையா ஆச்சாரி அவர்களாலியற்றிய,

வெண்பா

பாற்குழம்போ சர்க்கரையோ பாரக் கடலமுதோ
யாற்கும் புகல்வதரி தம்மம்ப —காக்கூர்வாழ்
முத்தமிழிலே மிகு முஹம்மதீ சுப்பெழுதும்
புத்தகத்தைப் பார்க்கும் பொழுது

இந்நூலாசிரியரின் கருத்து

அவையடக்கம்

அஞ்செழுத்தும் ஓதநன்று ஆகும்ஆதி நாயகன்
தன்சமர்த்து அன்றி இங்கு சாற்றுமெந்த பாடலும் [யை
என்சமர்த்தன் றென்றுதுணிந்து இருக்கும் நின்பொறுமை
நெஞ்சகத்துள் நின்றும் நீக்கி நேர்திருத்தி கேளுமின்

பதவுரை

எல்லாம் வல்ல இறைவனை துதி செய்து கூறுதலின் நன்கு முடியுமாதலான் இது ஆண்டவனது கிருபாகடாக்ஷ சாமர்த்தியத்தினால் கூறப்பட்டதன்றி இவனது வித்தியா சாமர்த்தியத்தினால் கூறப்பட்டதன்றென்று துணிந்து உங்களிடத்து இருக்கும் பொறுமையை அகற்றி எப்பிறுக்கும் விட்டொழிந்தவர்களாய் கண்ணுங் கருத்துமாய் வாக்கு மனமுமாய் ஒன்றுபடுத்தி பக்திவிசுவாச பரிசுத்த மனதோடும் காதுதாழ்த்திஇங்ஙனம் எடுத்துக் கூறப்படாநின்ற கந்தன்றுதியைக் கேளுங்கள் இனிதுகேட்பீர்களாகவும்என்பதின் கருத்து.

கடவுள் துணை.

கண்டால் உண்டோவினை.

—(❀)—

வழிபடுகடவுள் வணக்கம்.

காப்பு

கந்தன் றுதிபாடக்கடவுளே நீ எனது
சிந்தைதனி லமர்ந்து செப்புங்கால்—அந்த ஒரு
வாக்கியத்தை தான்பிடித்து வழுத்துவதல் லாதெந்த
வாக்கியத்தை யான்உரைப்பேன் வந்து

மாட்டுக்காரன்மகனே என்றமெட்டு

பதம்.

ஏட்டுக்கடங்காத ஆதி
ஏகவல்லோனே மதி
யூகநல்லோனே பசி
தாகமில்லானே துதித்
தேற்றும் மடியார்க்கு நெஞ்சம்
ஈகையுள்ளானே நெஞ்சம் ஈகை (ஏ)

பாட்டுப்பாட வகையறியாப்
பாவியும்நானே உனைத்

தாவியேதா னே வந்தேன்
கூவியேகோ னே என்னை
பாதுகாக்க ஈதுதநி
பாருகண்ணே தநி பாருகண் (ஏ)

நாட்டம் நிறைவேர வருள்
நான்சிறியே னே உனைத்
தான்தெறியே னே முழு
வீண்வெறியே னே இனி
எம்புமனத் துன்பம்மகல்
நீபெரியோனே அகல் நீபெரி (ஏ)

வாட்டம்மறத் தீட்டுங்கவி
வாசிக்கும் நேச ன் துதி
ஈசுப்புதாச ன் யாரும்
நேசிக்கும் சிஷ ன் எந்தன்
வல்வினை தீர்ப்பாயே காக்கூர்
மாநகர்வாசன் காக்கூர் மாநகர். (ஏ)

கதிர் காமத்து ஏசல் மெட்டு.

இராகம்- தேசிகத்தோடி- ஆதி தாளம்

பல்லவி.

ஆபத்துக்குதவாப் பிள்ளை
ஆகிலும் அய்யனே என்னை

ஆளா திருப்பதுவும் ஞாயமா ஞா என்னை
ஆளக்கருணை புரிநேயமா நே.

பாவியடி யேனுனும்
பாவத்துக்குள்ளாகா தென்னை
பா துகாறுதிருக்க நீதியா நீதி சிறு
பாலன் உனக்கு என்னவாதியா வாதி

என்பவமெல்லாம் பொறுத்து
துன்பங்களெல்லாம் அறுத்து
இரக்ஷித்தாளா திருக்க தர்மமா தர் நான்
என்னசெய்வேன் முன்செய்த கர்மமா கர்

அன்பொடு உனை வணங்க
இன்பொடுதுணிந்த என்னை
ஆளாதிருந்தாய்நல்ல யோசனை யோசனை இனி
ஆகிலும் ஆள்வாய் ஈசுப்பு தாசனை தாசனை

மாயமானவாழ்வை நம்பி என்ற மெட்டு.

இந்துஸ்தான் பியாகு, ஆதிதாளம்.

பல்லவி

ஏகனேஎன்மீது கிருபை
இரங்கிடாத தேனோ அறியேன்
ஆக மோக மாக்குமென்னை
ஆண்டிடாமர் மங்கள் தெறியேன் (ஏ)

ஏதுஇனி என் மீதுவர்மம்
இருப்பதை யாதென்று அறிவேன்
ஆதியில் மாதாபிதாசெய்
அருந்தவக் குறைதானோ தெறியேன் (ஏ)

பூதலமீதாரையும் நான்
போற்றின துண்டுமோ, வெறியேன்
பாதகன் படும்பாடை யறிந்தும்
பாதுகாரு சூது தெறியேன் (ஏ)

பாலன்எனை இவ்வேளையாளாப்
பாவம்என் செய்தேனோ குறியேன்
காலவிதி வசமோ முன்செய்த
கர்மமோ ஒன்றும் தெறியேன் (ஏ)

மாற்றியே சீராட்டி யுன்னை
மறந்திடாதென்னாளும் பிரியேன்
எற்றித் துதித்தும்பே சாது இருக்காய்
என்ன மாய மென்று தெறியேன் (ஏ)

வேசைமார்தர் ஆசையாலென்
மேனிவாடும் தீதோ சிறியேன்
தாசன் முகம்மது ஈசுப்பு சொல்
தப்பிதம் தானோ தெறியேன் (ஏ)

இந்துஸ்தான் கெஜல்

கவி.

ஆழிக்கடலில் அமிழ்ந்து போகும் என் ஊ
ஆதரித்தான் மீண்டும் அரும்பெரும் புண்யத்தாற்
ஆதிகுரு நாதன் ஆ, ஆ,
பாழுடம்பெடுத்த பாவியடியே ஊ
படைத்த ஜெகஜோதி பக்ஷம்வைத்தருளிய
பரிபூரண கிருபையை

பல்லவி.

தேகோ தேகோ பார் பார் நெஞ் சே
தீர்ந் தாயே கவலை இனி அஞ்சே (அரே)

2-வது கெஜல்

பூவுலகுமாதை புறக்கணித்தவாறு
போக்கடித்தான் மோகம் புதுமை என்னசொல் வேன்
புகழ் பெருகும் நீதன் புகழ் புகழ்
தேவலோகமாதை தெரிசிக்கும் வாறு
சித்தம்மகிழ்ந் தென்மேற் சிந்தையோடருளிய
திருவருள் நோக்கத்தை (தேகோ)

3-வது கெஜல்

அற்பனும் இந்த அடிமைனைக் கிரங்கி
அகமகிழுசித்தம் அசரீரீ வாக்காய்
அருமறைசொல் வேதன் அ அ

கெற்பமதில் என்னை கிடத்திய முதூட்டி
கேவலமிவ்வடியேன் கிலேசமறவருளிய
கிருபாகடாக்ஷத்தை (தேகோ)

நாநினைத்த வாறுதானினைத்த சீ ராய்
நலமது புரிந்தான் நட்ட நடுவீதி
நடன மிடுபாதன் ந, ந,
காணரிது கண்டாய் காக்கூரு ஈசுப் பு
கவலை எல்லாம்மாற்றி காக்ஷிதந்தருளிய
கருணைக்கண் பார்வையை (தேகோ)

கலைமகள் துதி

வெண்பா.

வாணிசரஸ்வதியே வாக்கருளையைந்தன்முனம்
வாரீ இதுததியே வரம்தந்து—நாரீ
என்று ஒருபேதமற என்றனுள்ளமே புகுந்து
உன்றனுரையே எடுத்து ஓது

கட்டழகியே என்ற மெட்டு.
இந்துஸ்தான் பியாகு ஆதி தாளம்
பல்லவி

அன்னைசரஸ்வதியே கலைவாணி ததி
அன்னமீதேறியேமுன் னிலைவாநீ
சின்னவன் மீது சிந்தைவைத்தோது
உன்னருள் தரபார் பார் சமய ம் கெதி
உண்டோ உனைத்தவிரயார் உபயம் (அ)

நாவுதடுமாருமல் நடம்புரிவாய் திரு
நான்முகன்றேவியரே திடம்மருள்வாய்
ஆவலாய் உன்னை கூவிடும் என்னை
மேவியுன்னிரு கடைக்கண்பா ராய் வெள்ளை
மெய்யுடையாளே எந்தன் முன்வா ராய் (அ)

வாகுபெறவருளும் தவமணி யே உந்தன்
வாய்திறந்தால் சிந்தும்நவமணி யே
சேகரித் தொன்ருய்
செய்தருள் நன்ருய்
மாகனகசித்திர பூ மா லை யென
மானிலத்திற் புகழ் வேன்பாமா லை (அ)

நாநீ என்புதை ஒழிப்பாய் ஷோக்கு இந்த
நாநிலமதிற்பவ நோ ய் போக்கு
நீநடு நாக் கு
நீன்றருள் வாக்கு

தானுஊனைத் தொழுவேன் வளர்காக்கூர் கவி
தாசன் ஈசுப்பை விழி மலர் நோக்கு (அ)

திருமால் துதி.

இராகம்-பியாகு, தாளம்-ஏகம்.

பஹாரியாலான் மெட்டில் பின் முடுகு.

பல்லவி

நாறுயணன் பதம்
நம்பினேனோநா நிதம்

அநுபல்லவி

மாருதவல்வினை சூனியம் மாற்றும் கெம்பீரன்
தீராத நோய்பிணிபவம் தீர்த்தாளும் சுந்திரன்
மறைதெளிந்த தந்திரன்
மாதவர்களுமெப் போது மனுதினம்
ஆதிமுதலே என் றோதிப் பணியும் (நா)

சரணங்கள்

வேதாந்த விடுசென்று வெண்ணெயுண்ட பொற்கான்
நாதாந்த கீதம்பாடும் நல்ல சங்கு சக்கரன்
நல்விவேக சுக்கிரன்

நாரூயணு யித்தருண மூந்தனே நாடினே னிப்போ து
ஞானசேகரா என்மீது கிருபை நல்குவாய் தப் பாது
ஞாலமீதி லுனையல் லாதெனக்கொருநன்றியும்கிடை யாது
ஞாயமோ உனக்கிது என்முன் வருகாதென்ன மாய சூது

நம்பினேனே காருபா து
நன்மையான வாக்கொன்றோ து
கண்பார்த் தருள வேணுவா து
கவிகள் புகழ்ந்தேனே உன்மீ து

காக்கூர் நகர் வாசன்
வாக்கால் வலி நேசன்

கவி.

கவிச்சிங்கங் களுக்குச்சே ன் உனைக்
கண்டு கொண்டேன் ஈசுப்பு தாச ன் என்
கண்ணெதிரே வந் து உன்
கருணை மலர் தந் து
காப்பாற்றி கரைசேர்ப்பா ய்
காக்ஷி கொடுக்க வுகந் து
காருண்ய சிவஞான க்
கருணனந்த போத க்

கத்தனே முத்தனே நித்தனே சித்தனே
பித்தனு மித்தரு ணத்திலே முற்றும் (நா)

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி

பல்லவி,

நான் கண்டேனே களி கொண்டேனே
மது வுண்டேனே புகழ் விண்டேனே

ஹரி ரும் ரும் ரும் சீதா
ரும் ரும் ரும் சீதா
ரும் ரும் ரும் சீதா
ரும் ரும் சந்திரனைக் (கண்)

காண என்மனம் காதலிக்க வும்
கன்மதீவினை பேதலிக்கவும் வும்
ஞானிலத்தவர் எற்றிநிற்க வும்
ராமமூர்த்திநானு யிருக்க வும் (கண்)

அவனி ஐம்பந்தாற் தேசம் ஆள வும்
அய்யோத்தியாபுரி தன்னில்வாழ வும்
பவனிவந்திட தேவர்சூழ வும்
பல்வினை பறந்தோடி மீள வும் (கண்)

அஞ்சல் அஞ்சலென்றே விதிக்க வும்
அவரவர் மதம் போற்றுதிக்க வும்
சஞ்சலங்களைத் தேஉதிக்கவும் வும்
சாமிகிருஷ்ணனென் றேமதிக்க வும் (கண்)

மாற்றியே சாந் தான்முடிக்க	வும்	
மவுனமோடு செந் தேன்குடிக்க	வும்	
ஏற்றியேசிர மேற்கடிக்க	வும்	
ஈசுப்பென்றுநான் கவிபடிக்க	வும்	(கண்)

ஞானம்பிகை துதி

இந்துஸ்தான் பியாகு, தாளம்-ஆதி.

பல்லவி

ஒரு தாய்க்குப் பிள்ளை ரெண்டுதா	ரு	என்னை
தள்ளாமற் சேர்த்துக்கொள்மூ	ரு	சிறு
சேய்க்கருள் அம்பிகைமீ	ரு	கோபம்
செய்யவேண்டாம் எதிர்நா	ரு	(ஒ)
கண்டம் கடந்த கபா	லி	உன்னை
காதலித்தேன் திரிசூ	லி	இதோ
தெண்டம் செய்தேன் பத்ரகா	ளி	.பாவம்
தீர்த்தருள் செய்வாய் நிர்தூ	ளி	(ஒ)
ஆலமுண்டசூலபா	ணி	தேவி
யாகவந்த திரைசா	ணி	ஞானப்
பாலமு தந்திடவா	நீ	சற்று
பார்கண் திறந்துகல் யா	ணி	(ஒ)

கந்தம் கமழ்சத்தி யா	ரி	காளி
கண்ணகையாம் அவ தா	ரி	பல
வந்தம் செய்யாமல் நீ கோ	ரி	எதிர்
வாவா சிம்மம் மேற்சவா	ரி	(ஓ)
மாமதுரை யா	சாக்ஷி	சொக்கர்
மகிழும் சுகான	மீனாக்ஷி	வரும்
ஏமன் நடுங்க உன்	சாக்ஷி	வைத்த
ஈசுப்புக்கே கொடு	காக்ஷி	(ஓ)

உ

ஸ்ரீ சிவசுப்ரமண்யக் கடவுள்மீது பாடிய துதி.

விருத்தம்.

எந்தவழிகண்டு ஏற்றித்துதித்துன் இடம்வருவேன்
அந்தவழியென்று அறியாமல் நெஞ்சம் அலையுமெற்கு
இந்தவழியென்று இன்றேவிளங்க இரங்கிமனம்
வந்தருள்செய் கந்தா வள்ளிதெய்வானை மயிலுடனே.

டான்ஸ்.

இராகம் இந்துஸ்தான பியாகு தாளம் சாப்பு

பல்லவி

மாதுவள்ளி தெய்வானையோ டெதிர்
வா வா வா சிவனே (மா)

ஆதாவுன்னையல்லாது என்னய்ய னே
ஆருமில்லை கெதி பன்னிரு கைய்ய னே
தீதறவேதினம் செய்தருள் மெய்ய னே
தேடியே கொண்டாடி யேபண்
பாடியேமுன் ஓடிவந்தேன்
தேவா தேசிகனே (மா)

சூரசங்கார சிங்காரக் கெம்பீர னே
தோத்திரம்செய் தேன்கடவுள் குமார னே
காரும் தயாளக் கருணாவுதார னே
கண்டால்உனை உண்டோவினை
தண்டாயுத பண்டாரமே
காவா காருண்யனே (மா)

காசினியோர் புகழும் கந்தாசுதந்திர னே
கஞ்சனைக்கொன்ற வைகுந்தா மருமக னே
மூஷிகவாகனவி நாயகசகோதர னே
மூலாதார மாலாய்வரு
கோலாகல வேலாயுத
மூவா மூர்த்திகனே (மா)

இக்ஷணம் பக்ஷமாய் ரெக்ஷிமனோகர னே
என்னையும் முன்னடிக் காளாக்குவாயர னே
பச்சைமயிலேறி ஓடிவாவா பராபர னே
பாசத்துடன் ஈசுப்புனை
நேசித்தடி பூசித்திட
பார்பார் பார்த்திபனே (மா)

இராகம் கல்யாணி, ஆதி-தாளம்.

பல்லவி,

வேலா உனைநம்பி னேன்
வேலனே வடி (வே)

வேலா உனை நம்பினே ன்
ஆளாய் மனம் வெம்பினே ன்
வேரார்கெதியா தீராற் கரனே
விரைவாய் யருகில் வருவாய் பரனே
தாரார் புயனே தருமா சரனே
ததிவந் தருள்புரி அதிசுந்தரனே (வே)

ஆதி மூலாதர னே
சோதி பராபரனே னே
அணைவாய் எனையாள் அானூர்மகனே
அடியார் மிடிதீர் அறுபா·முக னே
தனிமா முதலா கியவாசுக னே
சரவணபவ சிவகுருபரகுக னே (வே)

வள்ளி தெய்வானை பாகா
புள்ளிமயி லேறும் தியாகா
வரமே தருவாய் பெருமாள் மருகா
வருமா வினைதீர் வழியே சருகா

அருமாதவஞ்சேர் அடியார்க் கருகா
அடியார் மிடியறு வடிவேல் முருகா (வே)

காக்கூர் நகரில் வாசன்
கவிசொல் ஈசுப்பு தாசன்
கரைசேர்த் தினிதாய் கலிதீர்ப்பவனே
கதிசே ரடியார் துதிமாதவனே
அரிஓம் குருவாய் அமரா திபனே
அரகர சிவசிவ பிரணவ சிவனே (வே)

இராகம் கவாய், ஏக-தாளம்.

பல்லவி

ஆறுமுகவா ஆளமுனவா
அஞ்சலி செய்தேன் மகிழ்வாய் (ஆ)

மாறுபடுசூரர் தன்சிரம் கொய்தவா
மாதவர்க்குன் றன் மனமகி ழெய்தவா
கூறும்பொதிகை முனிக்கருள் செய்தவா
கொஞ்சமும் நெஞ்சம் மிரங்கலையா சிவா (ஆ)

ஆடும்மயில்மீ தமர்ந்து நடித்தவா
அங்கையிற்றூய வடிவேல் பிடித்தவா

மூடும்இருளற வேதம் படித்தவா
முற்றிலும் புத்தமுர் தத்தைக் குடித்தவா (ஆ)

மாங்கனிக்குவலம் சுற்றியே வந்தவா
மாதுதெய்வானை வள்ளியோ டணைந்தவா
தேங்கனிக்கு மலைமேலே உயர்ந்தவா
தித்திக்க தித்திக்க பத்திக் குகந்தவா (ஆ)

எவ்வியசுரர் சிறைமீள வென்றவா
ஈரார்கலையை அடக்கியே சென்றவா
எவ்வுலகும் நிறைந்தேகுடி கொண்டவா
ஈசுப்பு வாசிப்பை நேசித்து நின்றவா (ஆ)

இராகம் கவாய், ருபக-தாளம்.

பல்லவி

வடி வேலா வரமருளறுமுக வடி

வருவாய் இதுதறி தருவாய் பாகதி
வள்ளி தெய்வ யானையோடு சேர்ந்த
புள்ளிமயில் மீதேறி யாடுகஉத (வடி)

வாமதிதர இதுஒருபெறும் ம லையா
வருந்தும்எனது முனம் வரவெகு து லையா
அரகாசிவ சங்கர மகவ லையா

அருகில்வந்தி ஐயா
ஆகிமெதன்பி ஐயா
மருதுறேன் க ஐயா
வா என்முன்னி ஐயா (வடி)

தாணியிலுறும் பொருள் உறமுறை பந்து
சதமிலேஇது நிஜமெண மன தொந்து
பாவசமிகுசிறு பயமெதிர் வந்து
பாதமலர் தந்து
ஆதரியு கந்து
வாதகல்து ணிந்து
ஓதுசிகி யுந்து (வடி)

சரவணபவசிவ குருபர குகனே
சதுர் நடமிடு உமையவள் திரு மகனே
கரிமுகர்க் கிளைய வனெனும் ஆறு முகனே
கதிரை வேல் முருகன்
கரிய மால் மருகன்
பொதிகை வாழ் முனிவன்
போற்றித்தாள் பணிவன் (வடி)

கருதுமிருசரணம் அருள்பெறும் நேசன்
கவிபுகழ்ந்திடுங்காக் கூர் நகர் வாசன்
இரங்கிக் கிருபைபுரி ஈசுப்பு தாசன்
எவர்க்கும் விசு வாசன்
இயற்று தமிழ் பாசன்
நிகழ்த்து முப தேசன்
நீஎற்கு மக ருஜன் (வடி)

கட்டழகியே என்ற மெட்டு.

இராகம் இந்துஸ்தான் பியாகு. ஆதி-தாளம்.

பல்லவி.

செந்திலம் பதிவளர் முரு கோனே திரு
செங்கண்மாலரி ஹரிமரு கோனே
தீர சிங்காரா
சூர சங்காரா
சித்ரமயில்மீ தேறிவரு வோனே தேவ
தேவாதி தேவர்க்குமுதல் வோனே (செ)

கந்தா கதிரை வடி வேலோனே உன்னைக்
கண்டால் கவலையறும் மேலோனே

காருண்ய நேசா
காரும் பிர காசா
காளிகா தேவி யீன்ற பாலோனே ஞானக்
கர்த்தா சுப்ரமணிய சீலோனே (செ)

உந்தனைச் சதமென நினைந் தேனே நதி
ஓடிவந்துன்பதம் பணிந் தேனே
ஓதும் பிரைக் யாதா
உம்பர் ச மேதா
ஊழ்வினைகளை வேரோடறுப் போனே என்றன்
உள்ளம் மகிழுபவம் பொறுப் போனே (செ)

பந்தம்மகல வருள்ஸ்ரீ மானே உந்தன்
பாதம் தெரிசனம் தாரு மானே
பாடி உந்தனை யே
தேடும் எந்தனை யே
பாசமுடனே சிவ பெரு மானே காக்கூர்
ஈசுப்புதாசனைக் கண்பார் கோனே (செ)

ஆண்டிப்பண்டாரம் மெட்டு.

பல்லவி

வாவடி வேலா வள்ளி
மாமணா வாளா வரந்தா (வா)

மழையில்லாப் பயிரதுபோற்
வாடி மயக்கமுற்று
நிலையில்லா வாழ்வைநம்பி
நெஞ்சம்மிக நாளுடைந்தேன் (வா)

தாயிழந்த கன்றதுபோற்
தயங்கி தியங்குமொரு
சேயனெனக் கருள்வாய்
செந்திவடி வேலவனே (வா)

ஓராறு முகத்துடையா
உன்சமுகம் ஓடிவந்தேன்
ஈராறு கரத்துடையா
ஏழைஎன்மேல் இரக்கமுற்று (வா)

இனியேது செய்திடுவேன்
என் துயரம் யார்க்குரைப்பேன்
துணைஏதும் மின்றிஉனை
தோத்திரம் செய்தேன் தருணம் (வா)

தாளும் சிலம்பொலியும்
தாவடம்சேர் மார்பழகும்
தோளும் கடம்புமெதிர்
தோன்றமயிலேறி ஓடி (வா)

வேல்பிடித்து மயிலேறி
விரைவிலெதிர் தோன்றிலுந்தன்
கால்பிடித்து கண்ணில் வைப்பேன்
காக்கூர்வாழும் ஈசப்புமுன் (வா)

—(✽)—

இராகம் மால்கோஸ், சாப்பு தாளம்

பல்லவி.

ஆனைமுகனுக்கிளைய ஆறுமுகவா
எங்கள் ஆறுமுகவா ஞான
அம்பிகை பராசத்தி பயின்றமகவா குற
மானைத்தழுவியகந்த குமாரதேவா
கந்த குமாரதேவா வர்ன
மாமயில் மீதேறிஎதிர் ஓடிவா சிவா (எங்கள் ஆனை)

வ ண் ண ம்.

வந்தால் தீரும்என் துன்பம்
தந்தாள் சீருய்நின் தன்பம்
கந்தா காணேன்உன் டம்பம்
சிந்தாய் ஆனேன்கொண் டின்பம்
கதிர்வேல் முரு கா
ஹரிமால் மரு கா
துதியே மற கா
தொழுதேன் இரு கால்
துணைஎனஉனை நம்பினேன் விசுவாச ன்
தொண்டன் காக்கூர்நகர் ஈசுப்புதாச ன்
துடர்வினை எல்லாம் துலையும் நில்லாம ற்
பிடிபிடியென்றுநீ வருவதல்லாம ற்
பின்னை யொருவரு ம்
கண்ணிற் காணே ன்
பார் பார் பார்
உன்னையல்லா தென் னை
யாள் வோ ர்
யார் யார் யார் (எங்கள்)

இராகம் பார்ஸிநோட் ஏகதாளம்

பல்லவி

வாவடி வேலவா சிவா
வர்ணமயில் மீதேறி
வள்ளி தெய்வானையோடு
வரம்மருள்தர தருணமெதிரில் (வா)

காவடி கொண்டாடும் நாதன்
சேவடி தந்தாளும் நீதன்
கருணை வேதன்
கனமிகு முனதிணை யடியருள் (வா)

தொண்டர் கொண்டாடும் சீலன்
துள்ளும் மயிலேறும வேலன்
சுகிர்த லோலன்
துரைமகி ழூரிஹரி மருமக (வா)

வங்காரம் மணியும் மார்பன்
பங்காத புகழ் கொள் பூபன்
வாய்ந்த சோபன்
வருகுருபர சரவணபவ (வா)

எங்கும் புகழ் விஸ் வாசன்
தங்கும் மருட்பிர காசன்
இணங்கும் நேசன்

ஈசுப்பு களி தாசன்
ஈசுப்புதுதி பாசன்
ஈசுப்பு மக ருஜன்
ஈசுப்பு மகிழ் போஜன்

இருவிழி திறந் தருள்புரிகுரு (வா)

இராகம் இந்துஸ்தான், கவாய் தாளம் ரூபகம்

அரை இடம்.

பல்லவி.

ஆளுமிந்த வேளைஎந்த
காளும்கந்த வேலனே
நீளுமுந்தன் தாளை சொந்தம்
போலும்தந்து சீலனே (ஆ)

வர்னமயில்மீ தேறிஓடி
வருவாய் அறுமுகநாதனே
தருணம்மிது செஞ் சரணம் மருள்வாய்
தற்பரா நவ நீதனே (ஆ)

செந்திநகர்வளர் கந்தனே உந்தன்
சிந்தைமகிழ்ந்தருள் நேயனே
மைந்தனெனக்குறும் பந்தமகற்றுவாய்
மாது உமையவள் சேயனே (ஆ)

எந்தன் கூடநீ பிறந்து இருப்பதாய்
இயற்றுமெங்கள்கும ரேசனே
முந்தியு மிவ்வாறு தான்பிறந்ததாய்
மொழிந்து நின்ற முருகேசனே (ஆ)

காக்கூர் நகர்வளர் முகம்ம தீசுப்பு
கவிக்கருளும் சுப்ர மண்யனே
கனவில் வந்துபததெரி சனங்கள் பெறக்
காசுநீ தரும் தவப்புண்யனே (ஆ)

இராகம் செஞ்சுருட்டி ஏக தாளம்.

பல்லவி.

வேல்முருகா உன்னை
வேண்டிக்கொண்டேன்
மால் மருகா (ஆ)

வேல்முருகா ஒரு
கால்மறகா உன்னை (வேண்டி)
ஏழை எந்தனுக்கிரு
தாளை தந்திடவருள்
வேளையிதுவே கந்த
வேளை எனக்குகந்த (வேல்)

ஆலாய்ப் பறந்துகொண்டு
ஆளாய்வந்தென்னை இன்று
ஆறுதலை தந்தி
ஆறுமிலை கெதி
ஆறுமிகு மிடி
ஆறுமுக வடி (வேல்)

கவி.

எப்பய்யாஉன்னை எழியேன் மறந்து
இருந்ததுண்டும்
செப்பய்யா இன்று சிவசுப்ரமண்ய
தேசிகனே
இப்பய்யா வந்துஎன் முகம்பார்த்து
இரங்கியருள்
சுப்பய்யா நானும்ஈ சுப்பய்யா உன்னை
துதிசெய்தேனே (வடிவேல்)

இராகம்-காம்போதி தாளம் ஆதி,

பல்லவி

அண்டமும் பகிரண்டமும் குடி

கொண்ட குமரகனை ... யா

ராசகுதனை ... யா

சுப்ரமணி ... யா

ஆனேன் தனி ... யா

எனை ஆளாதிருப்பதுன் மனத்துணி ... வா

எனை ஆளாதிருப்பதுன் மனத்துணி ... வா (அ)

அண்டு மொருசிறு தொண்டனுக் கருள்

மன்றலார் சுக ... னே

ஆறுமுக ... னே

வேல் முருக ... னே

மால் மருக ... னே

அரிஓம் சரவண பவசிவ குக ... னே

அரிஓம் சரவண பவசிவ குக ... னே (அ)

தெண்ட விடுமுனை வண்டனெனது முன்

நின்று அருள் சீ ... லா

குமர வே ... லா

 ....

அமரர் மே — லா

மகாநுகூ — லா

தெய்வானை வள்ளி மகிழ் மணவா — ளா

தெய்வானை வள்ளி மகிழ் மணவா — ளா (அ)

கண்டு இனிதுற உன்றன் பதமு — தை

என்றும் அருள் புரிவா — ய்

அருகில் வருவா — ய்

மகிழ்வு பெறுவா — ய்

காட்சி தருவா — ய்

காக்கூரு ஈசுப் பைக்கார் விரைவா — ய்

காக்கூரு ஈசுப் பைக்கார் விரைவா — ய் (அ)

அம்பிகா உன்மகன் என்றமெட்டு

இராகம்-இந்துஸ்தான் தேடிகதோடி அடதாளம்

பல்லவி

வெற்றி மயிலேறும் — வேலனே

சத்தியுமை ஈன்ற — பாலனே (வெ)

முத்தி தரு குரு — பரனே

முழங்கும் பன்னீர் — காரனே

பக்திக் கருள்வா யானே
பாடி தேடி நாடி வாடி னேன் (வெ)

வள்ளி மகிழும் சுகனே
வந்தருள் வையாற் முகனே
துள்ளி எதிர் வரும் குகனே
சூர வீர தீர சோமனே (வெ)

என் கூடப் பிறந்த வனே
எவ்வுலகும் நிறைந்த வனே
வங்கார பணிந்த வனே
வாது ஏது ஓது நீதனே (வெ)

யோசிப்ப தேன் சிவனே
ஓடி வாவேஎன் முன்னே
ஈசுப்புக் கருள் பவனே
ஏது ஈத காது சோதனே (வெ)

இராகம்-பியாகு-ரூபகதாளம்

பாண்டிய னீன்ற மீனாட்சி-என்றமெட்டு.

பல்லவி

ஓராறு மாமுக வேலா உன்பாதம்
ஓதினேன் மேலா
ஈராறு காமருள் சீலா ஏஸ்பரி
ஈன்றிம் பாலா

வோராறு செதியுண்டும் காதா வித்தகர்
வேண்டிடும் போதா
தாராரு புயனே பொற் பாதா தமியேன்
தருணம் அருள் தாதா (ஓ)

பாராளும் பரமசிவன் மகனே பக்தர்கள்
பாலம் மகல் சுகனே
ஈரேழு உலகம் புகழ் குகனே என்மீது
இரங்கும் ஆறு முகனே (ஓ)
சீராரும் காவுகள் சூழும் செழித்து
க்ஷேம மிகும் நாளும்
காராரும் காக்கூர் நகர்வாழும் ஈசுப்பு
கவி முறை கேளும் (ஓ)

தேசமெங்கும் புகழ்—என்றமெட்டு
இராகம் இந்தல் தோடி ஆதிதாளம்
பல்லவி

கார்த்திகே யக்குமாரக் கந்தா கதிரை வேலா
காட்சி தந்தருள்வாய் ஹரி மருகா
யாத்திபம் நீயல்லாது பாரில் எனக்காருண்டும்
யானினா ணறிய பகர் முருகா (கார்)

கவி

அத்தனே அப்பனே அய்யனே னையுமெனை
ஆண்டருள் அன்பர் குகனே
சித்தனே சுத்தனே சிவசுப்ர மண்யனே
தேவி மீனாட்சி மகனே

பாட்டு

சித்ர மயில்மீதேறி சிரித்தறு முகத்துடன்
தீபரமா யோடி வா அருகா (கார்)

கவி

மாலையாய் நின்றுநான் மருகுவது கண்டுமுன்
மனமது இரங்க விலையா
வேலை வந்துதவு வாய் வித்தகர் சகாயனே
விரைவில் வந்தாள மலையா

பாட்டு

வேறுகெதி யாருமில்லை ஆறுமுக வேலவனே
வேண்டித் துதிசெய்தேன் உன்னிருகால் (கார்)

கவி

என்னதான் செய்குவேன் எவ்வண்ண முய்குவேன்
என்துயர் துன்ப மெல்லாம்
எவரிடம் விள்ளுவேன் எங்கனம் செல்லுவேன்
எம்பிரு னின்னை யல்லா

பாட்டு

ஈசுப்பு தாசனுக்கு இரங்கி யாள்வார்க ளில்லை
என று முனைப் பணிந்தேன் மறகா (கார்)

———

துலக்கு செம்பொன்—என்ற மெட்டு

இராகம் நேசிகம் ஆதிதாளம்

பல்லவி

வள்ளிதெய் வானையுடன் புள்ளி மயில்மீதேறி
துள்ளி எதிரில் வருவாய்—துரை எனும் அறுமுகனே
தெள்ளு தமிழுக் கருள்வாய் (வ)

அய்யோ உனைத் தவிர வையமெனக்குதவி
வையமீ துண்டோ நீ சொல்வாய்—வரு குரு பரகுகனே
ஐய மகற்றி மகிழ்வாய் (வ)

சஞ்சலத் தால்மயங்கி துஞ்சும் புழுவதுபோற்
தஞ்சமா யுன்னை அடைந்தேன்—சரவண பவ சிவனே
நெஞ்சம் புண்ணாக உடைந்தேன் (வ)

ஆறுத லாகவந்து தேறும்படி என்மனம்
அன்பாய் ஓர் மொழி யுரைப்பாய்—அரிஹரி மருமகனே
இன்பமோடென் அரு கிருப்பாய் (வ)

பாரா யிரு கடைக்கண் ரார ஈசுப்புகவி
பாடி இரக்கம் வல்லையா— பா ரருள் திருமகனே
கூடப் பிறந்துமா இல்லையா (வ)

விருத்தம்

வேலென்று சொல்ல வேறொன்று மில்லை
விஞ்சை மந்த்ரம்
வேலென்று சொல்ல வெருண்டோடும் வந்த
வினைகளெல்லாம்
வேலென்று சொல்ல வெற்றியும் கீர்த்தியும்
மேன்மை யுண்டாம்
வேலென்று சொல்ல வெண்ணிலா வந்துமுன்
விளையாடுமே.

இராகம் செஞ்சுருட்டி ஆதிதாளம்

பல்லவி

எடு—வேல் வேல் வேல் மயிலும்
வேல் வேல் வேல் மயிலும்
வேல் வேல் வேல் மயிலும்
வேல் வேல் வேல் மயிலும்
முருகோ னே

மால் மருகோ னே
வேல் முருகோ னே
மால் மருகோ னே
ஆள் பெருமா னே
தாள் மறகே னே (வடி)

அப்பனே எந்தன் கவலை தீர்த்தருள்
அடிமை நானுந்தன் கடைக்கண் பார்த்தருள்
தற்பரா இரு தாளை தந்தருள்
சாமிநீ இது சமயம் வந்தருள் (வே)

வன்ம மேனோ என்மீது நெஞ்சத்துள்
வந்தடைந்தேனுன் அபயம் ஏற்றுக்கொள்
சண்முகா மனம் இன்னும் ஏதுகல்
தருணம் வந்துஇரு சரணம் தந்துவில் (வே)

எம்பிரானே நீ அறிய பூவினில்
என்ன தப்பிதம் நான டந்ததில்
அன்புடன் எதிராக வந்துநல்
அரகரா சிவ சங்கரா மகிழ் (வே)

ஐயனே எனை யாள்வோ ருன்னையல்
லாது பூவில்வே றுண்டுமோ புகல்
தையல் வள்ளிதெய் வானையோடு சொல்
தாசன் ஈசுப்பு தங்கடங்கள் தள் (வே)

வேலா நீ கெதி—என்றமெட்டு

பல்லவி.

சாமி சண் முகனே உன்
தாளை வேளை ஏழை வேண்டினேன் (சா)

தாமதம் செய்யாம லெந்தன்
சஞ்சலம் தீர்ப்பாயே உந்தன்
மாபலர்தந் தாள்வாய் சொந்தம்
மாக நாக ரீகனே கந்த (சா)

ஆரும் தஞ்சம் மன்றி இன்று
அஞ்சுத லானே னென்று
தீராய் என் பவங்கள் நன்று
தேடி நாடி வாடினே நின்று (சா)

காகமாய் நின்று கதறி
கலங்கினே னங்கம் பதறி
வேகமாய் வாவா எதிரில்
வேத நீத போதனே குரு (சா)

இன்றும் அன்றும் எந்த நாளும்
இறைவனே வந்தென்னை யாளும்
தண்டமிழ் சொல் காக்கூர் வாழும்
தாசன் ஈசுப் பாசமாய்த் தொழும் (சா)

திருவே செறித்த என்ற திருப்புகழ் மெட்டு.

இராகம் தாளம் ஆதி.

வடிவேல் பிடித்து மயிலே நடித்து
மகிழ்வா யடுத்து விரை வாக
வா வேதுதித்த மகனு நினைத்த
வரமே யளிக்க யிது நேரம்

படிமீதி லுற்ற பொருளாசை பற்றி
பலமாய் மதித்த வடி யேனென்
பவமே பொறுத்து கலையே தவிழ்க்க
பயனே விளக்க எதி ரோடி

அடியேன் களிக்க வழகாய் சிரித்து
ஆணைவா யிருத்தி செவி யோரம்
அமுதே புசித்து அருளே சிறக்கும்
அறிவா மெடுத்த கலை ஓதிற்

குடிப்பேன் புகட்ட மதுவே திகட்டி
குதிப்பேன் குடித்துன் னரு ளாலே
குகனே குறத்தி சுகனே ஈசுப்பு
குறையே வகற்று முரு கோனே.

பரமஞான ரகசியம் அடையும் பொருட்டு நெஞ்சொடு வற்புறுத்திக் கூறியது.

விருத்தம்.

ஏமாளியில் உன்னைப் போல இவ்வுலகில் இயாரிருக்கார்
சாமான்ய மாக என்னை நினைத்து தாங் குலைந்தாய்
பாமாலை பாடி பாரெங்கும் கீர்த்தி பரவ முத்தால்
பூமாலை சூடும் முகம்மதி ஈசுப்பு புரவலனே.

குயிலே எந்தன் மீதில் என்ற மெட்டு

பல்லவி.

புத்தி உனக்கு இல்லைபோ மூட மனமே (பு)

போதமற்றினமே போக்கிறித் தனமே
போதும் போதும் போதும்நீ செய்தகனமே (பு)

பலபல பண்டம் பருத்திட முண்டம்
வாங்கியேஉண்டாய் வந்திடப் பெரும்தெண்டம் (பு)

தெளிவான மார்க்கம் தெரியாமல் தீர்க்கம்
சித்தமதுபோற் சென்றாய் பாருந்தன் மூர்க்கம் (ப)

ஆதியைப் போற்றி அநுதினம் ஏற்றி
அந்தரம் புகுதா திருந்தாய்நீ மாற்றி (ப)

நடுவணை சென்று நடனமே கொண்டு
நடிக்கா திருந்தாய் நலவாகக் கண்டு (ப)

தாசன் ஈசுப்பு தமிழதை ஒப்பு
தப்பிதம் செய்யா தகல்விட்டேன் மாப்பு (ப)

கவி.

அவ்வலில் அமைப்பான அரூபியை
எவ்வுயிர்க் குயிரான ஏகாந்தியை
ரவ்விலும் பகலாக நமதுள்ளே
செவ்விதாள் பணிந் தேற்றித் துதிசெய்வாம்.

வசனம்.

ஈரேழு பதினாலு உலகங்களையும் படைத்து எவ்வுயிர்க ளுக்கும் இறணம் அளிக்கும் ஆதிகர்த்தாவாகிய அந்த ஆண்டவன், முன்னுக்கு முன்னுள்ளவன், பின்னுக்கு பின்னுள்ளவன், மறைந்தவனுக்கு மறைந்தவன், வெளி வந்தவனுக்கு

வெளி வந்தவன், அந்த ஆண்டவன் கண்ணன்றி பார்ப்பவன், காதன்றிகேட்பவன், நாவன்றி பேசுபவன், மூக்கன்றி முகர்கிறவன், அந்த ஆண்டவன் தாய் தகப்பன் இல்லாதவன், உடபிறப்பில்லாதவன், ஊணுறக்க மில்லாதவன் மோகம் தாகம் இல்லாதவன், அந்த ஆண்டவன் இன்பம் துன்பம் இல்லாதவன், இணை துணை இல்லாதவன், எங்கும்நிறைந்தவன், இருதயத்துறைந்தவன், அந்த ஆண்டவன் ஆண் பெண்இல்லாதவன். ஆதியந்தம் இல்லாதவன். அழிவில்லாதவன், பழுதில்லாதவன், அந்த ஆண்டவன் நிகரற்றவன், புகழுற்றவன், பேசுதற் கரியவன், பெருமைக்குரியவன், அந்த ஆண்டவன், தானனவன், தனித்தவன், முதலவன், தூய்யவன், வல்லவன், நல்லவன், அந்த,

---

பாண்டிய னீனற மீனுட்சி—என்றமெட்டு

இராகம்—பியாகு—ரூபகதாளம்

பல்லவி.

ஆண்டவன் தோன்றும் திருக்காட்சி—கண்டோர்கள்
அடையவே மாட்சி
தாண்டிநின் ருடு மொரு சூட்சி—கண்டோர்க்கு
தவிழுமே தாட்சி (ஆ)

கவி.

ஆர்க்குமது கிட்டாது அரிதான மந்திரம்
அறிய நுனி நாசி மேலே
கூர்க்க எண்சாணதிற் குலாவிடக் காணலாம்
கும்மென்ற ஓசை யாலே

பல்லவித் தொடர்.

கூண்டுக்குள் மீண்டும் புளுவாலே குளவியாம்
கொள்கையது போலே (ஆ

கவி.

தேகம் வலுத்திடும் யோகம் நிலைத்திடும்
தெளிவுறும் ஆசை யாலே
சோகம் மகற்றிடும் போகம் விளைத்திடும்
சுத்த மெஞ் ஞான மதிலே

பல்லவித் தொடர்.

தும்பிகள் நிம்பி வாயாலே தூண்களை
துளைக்கும் மாப் போலே (ஆ)

கவி

காலனவன் நம்மையே கண்டுகொண்டு பார்த்திடான்
கதியுற்ற வாசி யாலே
வால வயதாகிட வாய்க்குமே சொர்க்கபதி
வருகை யுண்டாக மேலே

பல்லவித் துடர்.

வண்டினம் கொண்ட பசியாலே தேன்களை
உண்டவாற் போலே (ஆ)

கவி

பாராளும் நம்மிறையோன் பக்கம்மது சேறலாம்
பலன் பெறும் முத்தி யாலே
ஈரேழு உலகமதை ஏறிட்டுப் பார்க்கலாம்
இருதயக் கண்ணி னாலே

பல்லவித் துடர்

ஈசுப்பு தாசன் நாவாலே ஏ.கனை
ஏற்றும் துதி போலே (ஆ)

விருத்தம்

நூறாயிரம்கல்வி கற்றதி னாலென்ன நூறுபத்து
பேறாயிரம்விதக் கேள்விகளாலென்னே பிதற்றிவந்து
வீறாயிரம்பேசி ஆவதென்ன வேதாந்த வாசல் [சே
பாறாதபேர்க்கென்ன பலனுண்டும் பெலனுண்டும்பகருவி

இந்துஸ்தான் - கெஜல்

பல்லவி.

ஆனந்தக் கூத்தாடுவாய்—என் கண்மணி
ஆனந்தக் கூத்தாடுவாய்

வானத்திலே நடு தானத்திலே ஞான
மோனத்திலே மூன்று கோணத்திலே நின்று (ஆ)

மூலத்திலே திரு மூலத்திலே ஜெக
ஜாலத்திலே ஓடைப் பாலத்திலே நின்று (ஆ)

தீரத்திலே குரு வாரத்திலே சாம
கோரத்திலே செவி யோரத்திலே நின்று (ஆ)

ஏகத்திலே சிவ யோகத்திலே மதி
யூகத்திலே ஜடை நாகத்திலே நின்று (ஆ)

———

கவி.

ஆட்டமது கொண்ட அரிவையரே உன்றன்
அழகது பிறக்கும் அதிலே சிறக்கும்
நாட்டமது செய்ய நடனம்மது கொள்ளும்
நம்பினபேர் யாவருக்கும் நலமது கொடுக்கும்

வாட்டமது என்றும் வாறாது கார்க்கும்
வாசல் சிறுவாசல் புகுந்தோர்க்கு
தேட்டமொடு செந்தேன் தித்திக்க வார்த்து
தீரும் பசி தளரச் செய்திடுமே

பாடல்.

சிறு வாசலிலே நுனி நாசிமேலே மூனை
ஊசி போலேசுழல் வாசி யறிந்தாயில்லை
அறிந்தால் பாச எமனும் இல்லை காக்கும்
ஈசுப்பு தாசன் சொல்லை உன்மனதில்
யோசித் துணர்வா யுள்ளே பணிந்து பூசித்
துண்பாயே கள்ளே அதுதான் தில்லே

வெண்பா

மானிலத்தி லுற்ற மானிடவர் தங்களுக்கு
ஞானவழி தன்னை நானுரைக்கத்—தானவனே
நீனேது நிற்பதங்கு நில்லா துளம்புகுந்து
நானேது நீயே நவில்

இராகம் செஞ்சுருட்டி ஏகதாளம்

பல்லவி

தில்லாலங்கடி தில்லாலங்கடி தில்லாலங் கண்டேன்
பெண்ணேநான் தில்லாலங் கண்டேன்
கண்ணேநான் தில்லாலங் கண்டேன் அந்த

தில்லாமலென்கிற சொல்லாலறிந்து செங்தேனையுண்டேன்
பெண்ணேநான் செந்தேனை யுண்டேன்
கண்ணேநான் செந்தேனை யுண்டேன்
ஒரு தெளிவிலே இரு விழியிலே
சிறு வழியிலே பெரு வெளியிலேநான் (தி)

நாசி நுனிமீது நடுவாசலும் சென்றேன்
பெண்ணேநான் வாசலும் சென்றேன்
கண்ணேநான் வாசலும் சென்றேன் அந்த
சனுக்குள் பேசரிய பூசையில் நின்றேன்
பெண்ணேநான் பூசையில் நின்றேன்
கண்ணேநான் பூசையில் நின்றேன்
நடு வணையிலே சுழி முனையிலே
மலைச் சுனையிலே கள்ளுநப்பனையிலேநான் (தி)

புலி கள்ளர்மிகும் காட்டையும் அடைந்தேன்
பெண்ணேநான் காட்டையும் அடைந்தேன்
கண்ணேநான் காட்டையும் அடைந்தேன் அந்த
டைவெட்டி ஏழுதிரைக் கோட்டையுங்கடந்தேன்
பெண்ணேநான் கோட்டையும் கடந்தேன்
கண்ணேநான் கோட்டையும் கடந்தேன்
பல கலையிலேவரு நிலையிலே
சிறு துலையிலே உச்சந் தலையிலே நான் (தில்)

கனவிற் பாடிய கந்தன் றுதி.

நோய்பிணி யண்டா தகலும் நோட்டமும் அறிந்தேன்
பெண்ணேநான் நோட்டமும் அறிந்தேன்
கண்ணேநான் நோட்டமும் அறிந்தேன் அந்த
நோட்டமதிற் காலன்வெகு ஓட்டமுந் தெறிந்தேன்
பெண்ணேநான் ஓட்டமுந் தெறிந்தேன்
கண்ணேநான் ஓட்டமுந் தெறிந்தேன்
ஒரு நொடியிலே குணங் குடியிலே
பா னடியிலே மேலப் படியிலேநான்

எழுவயதிற் இறையருளாற் ஏற்றியவாசன்
பெண்ணேநான் ஏற்றிய வாசன்
கண்ணேநான் ஏற்றிய வாசன்
ஏற்றி-இன்புறும கூக்கூர் வளரும் ஈசுப்பு தாச
பெண்ணேநான் ஈசுப்புதாசன்
கண்ணே நான் ஈசுப்புதாசன்
அடி இகத்திலே என தகத்திலே
பா யுகத்திலே இறை தகுத்திலே நான்

கவி.

யாரென்றுஎன்னை மதித்துவந்தாய்இந்த அவனிபி
பாரென்றுசொல்லி நானை அருட்கவி பாடிடவே
வேறொன்றும்சொல்ல வழிஏதும்தோணு விரைந்
காரொன்றுவந்து என்காலில்விழுந்தகல் காரணமே

கண்டு களித்தான்
மன்றுள் நடித்தான்
கந்தா குமரக் கடவுளா மென்றான்
இந்தப் படியுரை என்றருளித்தான்
ஈசுப்பு தாசனெனப்பெய ரிட்டான்
அந்தம் பிருந்தான்
சிந்தை யுகந்தான்
புனந்தம் பொங்கி அருளால் மொழிந்தான்

மங்கள வாழ்த்து.

இசைந்த சூலம் என்ற மெட்டு.

இராகம் தாளம் ஆதி.

ந்த ஞானத் திருவருள் பெருகிய சிவன்வாழி
ளிந்த போதத் தழுந்திய பகவதி யுமைவாழி
தஜோதி கரிமுக னறுமுகன் மலர்வாழி
நசந்தன் றுதியுரை செய்தவர் நிதம்வாழி
ந்து கமலச் சிகாமீ தொழுகிய வரும்வாழி
ந்த கோபத் தடங்கிய மறையவர் பதம்வாழி
பாலைப் பருகிய பெரியவர் கழல்வாழி
பாடற் கினிசெவி தருபவ ரெனும்வாழி.

சுபம். சுபம்,